மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன். திருப்பூர் அரசாங்க மருத்துவ மனை 49 படுக்கை வசதிகளைக் கொண்டது. நகரின் மொத்த ஜனத்தொகை சுமார் 1 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. எனவே, அரசாங்க மருத்துவ மனையில் இட நெருக்கடி தவிர்க்க முடியாததாயிருக்கிறது. இந்த நிலைமை எல்லா மருத்துவ மனைகளிலும் அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்து வருகிறது.

மேற்படி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட படுக்கை வசதிகளைவிட அதிகமான நோயாளிகளைத் தவிர்க்க முடியாத காரணங்களால் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கட்டில் படுக்கை வசதியில்லாத காரணத்தால் அரசாங்க மருத்துவ மனைக்கு கடும் நோயுடன் வரும் நோயாளிகளுக்கு இடமளிக்க மறுப்பது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது. கட்டில் படுக்கை வசதியில்லாத நோயாளிகளின் நிலையைக் கருத்திற் கொண்டு படுக்கை வசதிகளுடன் தரைமீது இருக்க வைத்து சிகிச்சை செய்யப்படுகிறது.

அரசாங்க மருத்துவ மனையில் "அவுட் பேஷன்ட் பிளாக் ஒன்றும், இன் பேஷன்ட் பிளாக் ஒன்றும்" விரிவுபடுத்த ஒரு திட்டம் மருத்துவ நெறியாளர் பரிசீலனையில் இருந்து வருகிறது. அரசாங்க நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டம் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

(g) வட ஆர்க்காடு மாவட்டத்தில் ரசாயன உரம் கிடைக்காமை

திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூராவிலும் குறிப்பாக, அரக்கோணம் தாலுக்காவைச் சேர்ந்த கிராமங்களில் இந்த போக சாகுபடிக்கு (சுவர்ண வாரி) தேவையான ரசாயன உரங்களாகிய அமோனியம் சல்பேட், யூரியா முதலியன விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்காததுடன் ஒவ்வொரு கிராமத்திற்கும் சராசரி பத்து மூட்டைகள்கூட வரவில்லையாதலால் மேற்படி உரங்கள் உடனே கிடைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன். பொதுவாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலும், குறிப்பாக அம்மாவட்டத்தில் அரக்கோணம் வட்டத்திலும் உள்ள உழவர்களுக்கு இரசாயன உரங்கள் போதிய அளவிற்கு வழங்கப்படுவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இரசாயன உரங்கள் பொதுவாகக் குறைந்த அளவில் கிடைக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த அரசின் உரத் தேவைகளுக்கேற்ப போதிய அளவிற்கு உரங்களை வழங்க இந்திய அரசால் முடியவில்லை. அந்த அரசு வழங்கும் உர அளவு எப்போதுமே நமது தேவைக்குக் குறைவாகவே இருந்து வருகிறது. உரங்கள் தேவைப்படும் அளவையும், அவை வழங்கப்படும் அளவையும் கருத்திற்கொண்டு, இந்திய அரசு மாநிலங்களுக்கு உரங்களை ஒதுக்கித் தருகிறது. அவ்வாறு ஒதுக்கப்படும் உரங்கள் ஏனையோருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 1966–67-ம் ஆண்டுக்கென வட ஆர்க்காடு மாவட்டத்தின் பயிர் பருவக்கால் அட்டவணையையொட்டி, அம்மாவட்டத்திற்கு 39,487 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) தேவைப்பட்டது. ஆனால், 19,402 மெட்ரிக் டன் உரங்களைத்தான் அரசால் ஒதுக்க முடிந்தது.

மிகுதியான விளைச்சல் தரும் நெல் ரகங்கள் உட்பட, குறுகிய காலக் கோடைப் பயிராகிய சொர்ணவாரிக்கென, 1967 ஏப்ரல் முதல் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 5,608 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டது. 1–4–1967 முதல் தொகுப்பு விலைகள் (Pool prices) உயர்த்தப்பட்டதன் காரணமாக, சிறிது காலத்திற்கு உர வாணிபம் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த இடையீட்டினைத் தவிர உழவர்களுக்கு உரங்கள் எளிதாகவும், ஒரு சீராகவும் தொடர்ந்தும் கிடைத்து வந்துள்ளன.

அரக்கோணம் வட்டத்தைப் பொறுத்தவரையில், உரங்களை விற்கும் வேலையும் பங்கீடு வேலையும் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அச் சங்கம் தனது சில்லறை வியாபாரிகள் மூலம் உரங்களைப் பங்கிடும். 1966–67-ல் அரக்கோணம் வட்டத்திற்கு 2,823 மெட்ரிக் டன் உரம் தேவை என மதிப்பிட்டிருந்தது. ஆனால், 2,046 மெட்ரிக் டன் உரமே (அமோனியம் சல்பேட் கணக்கில்) இந்த வட்டத்திற்கு வழங்கப்பட்டது. அம்மாவட்டத்தில் நிலவும் பொது நிலைமையைக் கருதிப் பார்க்கையில், இது போதுமானதல்லவெனச் சொல்ல முடியாது. மிகுதியான விளைச்சல் தரும் பயிர்வகை உட்பட சொர்ணவாரி கோடைப் பயிருக்காக, 1967 ஏப்ரல் முதல் இந்நாள் வரையில் அரக்கோணம் வட்டத்திற்கு மட்டும் 551 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டுள்ளது.

1967 ஜூன் இரண்டாவது வாரத்தில் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திற்குக் கடைசியாக ஒதுக்கப்பட்ட 115 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) இன்னும் எடுத்து அனுப்பப்படவில்லை. ஒதுக்கப்பட்டுள்ள உரங்களை மொத்த விற்பனைச் சங்கம் எடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது. அச்சங்கத்தின் நிதி வரையறை, ஏனைய வரையறைகள் காரணமாக அத்தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. உரங்களைப் பங்கிடுவது குறித்து மாவட்ட அளவில் உரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு அதிகாரிகளும் அரசுச் சார்பற்றவர்களும் உறுப்பினர்களாய் உள்ளனர். இந்த வட்டத்தில் உரங்களை இன்னும் சிறந்த முறையில் பங்கிடுவதற்கான சில பரிவுரைகளை இக்குழு வழங்கியுள்ளது. இந்தப் பரிவுரைகளை வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் தனியே ஆய்வு செய்துவருகிறார். எனவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் சொர்ணவாரிப் பயிருக்கு இரசாயன உரங்கள் ஒரு சீராகப் பங்கிடப்பட்டன என்பதையும் சொர்ணவாரிப் பயிருக்காக உரங்களைப் பெறுவதில் எந்தத் தனி இடர்பாடுகளும் உழவர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் இதனால் அறியலாம்.

(ஊ) கோவையில் தொழிலாளருக்குப் போதிய மருத்தவ வசதியின்மை.

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவையில் உள்ள அரசினர் தலைமை மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு என ஒரு பிளாக் மட்டுமே இருப்பதால் கோவை மாவட்டம் முழுவதும் உள்ள ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி மருத்துவம் பார்க்கும் வசதி இல்லாமை குறித்த அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிக சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கிறேன். கோவையில் அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ வசதிக்கான இணைப்புக் கட்டிடத்தில் கோயம்புத்தூர் பகுதியிலுள்ள காப்புறுதித் திட்டத் தொழிலாளர்கள் தங்கியிருந்து மருத்துவம் பெறுவதற்கான வசதிகள் போதுமான அளவில் இல்லை. இது பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிலை குறித்து அரசின் நாட்டத்தை ஈர்த்து தமிழகச் சட்டமன்றப் பேரவையின் விதிகளைச் சேர்ந்த 41-வது விதியின் கீழ் திரு. எஸ். துரைசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்.